இணைப்பு-I

(412 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 8 - பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) அறிவிப்புகள், 2010-2011

1. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளை பராமரிப்பதற்கும், தேவையான நேரத்தில் தகுந்த சிகிச்சை அளிப்பதற்கும், 40 முதல் 50 சங்கங்களுக்கு ஒரு கால்நடை மருத்துவர் என்ற அடிப்படையில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மாவட்ட ஒன்றியங்களில் கூடுதலாக 50 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள், ரூ.192 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

2. தூய பால் கொள்முதல் முறையை செயல்படுத்தவும், ஆரம்ப நிலையில் பாலில் காணப்படும் நுண்ணுயிர்களின் அளவை கட்டுப்படுத்தவும், நடப்பாண்டில் மத்திய அரசு மற்றும் மாவட்ட பால் ஒன்றிய திட்டங்களின்கீழ் கிராம அளவில் 20 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும்.

3. தமிழ்நாட்டில் எருமையின வளர்ப்பை ஊக்குவிப்பதற்கும், எருமைப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், "எருமையினக் கன்றுகள் வளர்க்கும் திட்டம்" செயல்படுத்தப்படவுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 605 பெண் எருமையினக் கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, இலவசமாக கால்நடைத் தீவனம், காப்பீடு மற்றும் கால்நடைப் பராமரிப்புப் பணிகள், ரூ.156.40 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும்.

4. மடிநோய் தவிர்த்தல், பணியாளர் குறைவை நிவர்த்தி செய்தல், கலப்படத்தைத் தடுத்தல், உற்பத்தி செலவைக் குறைத்தல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பால் உற்பத்தியாளர்களின் உபயோகத்திற்காக, பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு 100 தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

5. தூய பால் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் நோக்கில், 400 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2000 துருவுறா எஃகு பால் கேன்கள் ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

[2010 மே 5

இதில், ரூ.27.00 இலட்சம் அரசு மானியமாகவும், ரூ.27.00 இலட்சம் சங்கங்களின் பங்காகவும் இருக்கும்.

6. தூய பால் உற்பத்தியை மேம்படுத்த, 150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 150 துருவுறா எஃகினாலான பால் சேகரிப்பு உபகரணங்கள் ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

7. சங்க வளாகத்திலேயே உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலை எடையிட்டு வாங்குவதற்கு வசதியாக, 200 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின்னணு எடை இயந்திரங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். இதில், ரூ.20.00 இலட்சம் அரசு மானியமாகவும், ரூ.20.00 இலட்சம் சங்கங்களின் பங்காகவும் இருக்கும்.

8. பாலின் தரத்தைத் துல்லியமாகக் கணக்கிடவும் மற்றும் கொள்முதல் விவரங்களை கணினியில் பதிவு செய்து பால்பண பட்டுவாடா கணக்குகளை எளிதாக பராமரிக்கவும், 150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின்னணு பால் பரிசோதனைக் கருவிகள் ரூ.52.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

9. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 100 புல்வெட்டும் கருவிகள், ஒருங்கிணைக்கப்பட்ட பால்பண்ணைகள் மற்றும் பிரதம சங்கங்களுக்கு ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

10. மின்னணு ஆளுமையை மேம்படுத்தும் வகையில், ஆணையர் அலுவலகத்தில் ரூ.6.80 இலட்சம் மதிப்பீட்டில் கணினி மற்றும் பிரின்டர்கள் நிறுவப்படும்.

11. மாதவரம் பால்பண்ணையிலுள்ள புல் பண்ணையைச் சுற்றி முள்வேலி மற்றும் மின்சக்தியை சேமிக்கும் வகையில் சூரிய சக்தியினால் எரியக்கூடிய விளக்குகள் ஆகியவை மொத்தம் ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

12. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 500 உறுப்பினர்கள், ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்விச் சுற்றுலாவாக பிற மாநிலங்களுக்கு அழைத்து செல்லப்படுவார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

13. பால் மற்றும் பால் உபபொருட்கள் தரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் நிறுவப்படும்.

14. ஒன்றிய மற்றும் இணைய தொழில்நுட்பப் பணியாளர்களின் திறமைகளை வளர்க்க, 400 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு, ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

15. எரிசக்தி சேமிப்பு மேலாண்மைத் திட்டம், 7 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூ.75.60 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

16. ஒருங்கிணைக்கப்பட்ட பால்பண்ணை கிராமங்களில் 500 ஏக்கர் பரப்புளவில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புல்பண்ணைகள் நிறுவப்படும்.

17. நடப்பாண்டில், புதியதாக 150 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். மேலும், செயல்படாமலுள்ள 100 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிரூட்டப்படும்.

18. ஒன்றியப் பணியாளர்களுக்கு இரவுப் பணிப்படி ரூ.15/-லிருந்து ரூ.20/-ஆக உயர்த்தியும், சலவைப்படி ரூ.60/-லிருந்து ரூ.70/-ஆக உயர்த்தியும் வழங்கப்படும். சலவைப்படி உயர்வு இணையப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும்.

19. பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அளவில் அதிகமாக பால் வழங்கும் பத்து உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதல் 3 உறுப்பினர்களுக்கு, பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், இதர 7 உறுப்பினர்களுக்கு ஊக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

20. ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சார்ந்த, பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த, பால் வழங்கும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு, மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழை ஒரு பாடமாகக்கொண்டு, அதிக மதிப்பெண் பெறும் ஒருவருக்கு ஒரு மடிக்கணினி வீதம் 17 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

[2010 மே 5

21. ஒன்றியப் பணியாளர்கள், பிரதம பால் கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளில் +2 தேர்வில், தமிழை ஒரு பாடமாகக் கொண்டு, அதிக மதிப்பெண் பெறும் ஒருவருக்கு ஒவ்வொரு ஒன்றிய அளவிலும் ஒரு மடிக்கணினி வீதம் 17 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

22. மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழைப் பாடமாகக் கொண்டு, மாநில அளவில், முதல், இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களில் தேர்ச்சி பெறும் இணையம், ஒன்றியங்கள் மற்றும் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குழந்தைகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்கு, 5 ஆண்டுகள் அல்லது அவர்களது பட்டப் படிப்புக் காலம் இதில் எது குறைவோ, அதுவரை அரசு நிர்ணயித்த கல்வி கட்டணத் தொகை முழுமையாக ஏற்கப்படும்.

23. மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழைப் பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெறும், இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களின் குழந்தைகளில், அதிக மதிப்பெண் பெறும் 5 ஆண் மற்றும் 5 பெண் குழந்தைகளுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

24. மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழைப் பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெறும் பிரதம பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் குழந்தைகளில், அதிக மதிப்பெண் பெறும் 5 குழந்தைகளுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

25. நடப்பாண்டில், நாளொன்றுக்கு 28.00 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

26. நடப்பாண்டில், சென்னை மாநகரத்தில், நாளொன்றுக்கு 10.40 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும், மாவட்ட ஒன்றியங்கள் வாயிலாக நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

27. மாவட்ட ஒன்றிய அளவில், சங்க உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளில், அதிக பால் உற்பத்தியில் சிறந்த எருமையினம், கலப்பினம் மற்றும் நாட்டினம் ஆகிய இனங்களில், பிரிவுக்கு 3 மாடுகள் தேர்வு செய்யப்பட்டு, ஒன்றிய அளவில் ஊக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். அதேபோன்று, மாநில

அளவில், பிரிவுக்கு ஒரு கறவையினம் தேர்வு செய்யப்பட்டு ஊக்கப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

28. மாநில அளவில், செயற்கைக் கருவூட்டல் பணியினை திறம்படச் செய்து இனவிருத்திப் பணியை அதிகரிக்கும் பணியாளர்களில், ஒரு பெண் பணியாளர் உட்பட மூவர் தேர்வு செய்யப்பட்டு, ஊக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

29. பாலின் முதன்மைத் தரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள, மொத்த பால் குளிர்விப்பான் மையங்களில் திறம்படச் செயல்படும் மையத்தின் சிறந்த மூன்று செயலாளர்களுக்கு ஊக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

30. இலாபத்தில் செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், பால் வழங்கும் பிரதம பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களின் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், சங்கத்தின் நிருவாகச் செலவிற்காக பிடித்தம் செய்யப்படும் தொகையை ஏற்று, அதற்கிணையான தொகையை, பால் உற்பத்தியாளர் சங்கங்களின் மூலமாக உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் விலையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

31. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும், மாற்றுத் திறன் கொண்ட பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அறிவித்துள்ள போக்குவரத்துப்படி வழங்கப்படும்.

32. மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய களப் பணியாளர்கள் மற்றும் இணைய விற்பனைப் பிரிவு களப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிரந்தர பயணப்படி, தற்பொழுது வழங்கப்படும் தொகையிலிருந்து ரூ.100/- உயர்த்தி வழங்கப்படும்.

33. இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்படும் இடையூறுப்படி ரூ.200/-, ரூ.400/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

34. பிரதம பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்படும், சீருடைகள் மற்றும் தையற்கூலி ஆகியவை

ஆண்களுக்கு, ரூ.840/-லிருந்து ரூ.890/- ஆகவும், பெண்களுக்கு ரூ.770/-லிருந்து ரூ.790/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

35. பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கும் உறுப்பினர் அல்லாத பால் உற்பத்தியாளர்களையும் ஊக்குவிக்கும் விதமாக, இலாபத்தில் இயங்கும் சங்கங்களில் 2007-2008 மற்றும் 2008-2009 ஆம் ஆண்டுகளுக்கான ஊக்கத் தொகை உறுப்பினர் அல்லாதவருக்கும் வழங்கப்படும்.

36. மாநில அளவில் திறம்பட செயல்படும் சிறந்த சங்கங்களின் 3 செயலாளர்களுக்கு ஊக்கப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

37. தரம் உயர்ந்த ஜெர்சி கலப்பின பொலி காளைகளை உருவாக்கும்பொருட்டு, வேலூர் மற்றும் விழுப்புரம் ஒன்றியங்கள் தேசிய பால்வள வாரியத்துடன் இணைந்து வம்சாவழியின சோதனைத் திட்டம், ரூ.8.64 கோடி செலவில் வரும் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS